## காரமடை நகராட்சி

2022 ம் ஆண்டு ஜுலை மாதம் 29ம் நாள் வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம், காரமடை நகரமன்ற கூடத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர்**

நகரமன்றத் தலைவர்
காரமடை நகரமன்றம்

---

**பொருள் : 1**

நகரமன்றத் தலைவரால் கொண்டுவரப்படும் தீர்மானம்.

தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களது நல்லாட்சியில், காரமடை நகராட்சியில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டை சரிசெய்யும் வகையில் ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பணிகள் மேற்கொள்ள பரிந்தரை செய்த எங்கள் அன்பு அண்ணன் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.இராசா அவர்களுக்கும், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களுக்கு காரமடை நகரமன்றத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**பொருள் : 2**

காரமடை நகராட்சி ஆணையாளரது ஜுன்-2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :-** பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1879/2021/இ1)

**பொருள் : 3**

காரமடை நகராட்சியில் தொழில் உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்ய நகரமன்றத் தீர்மானம் எண்.59, நாள்.30.06.2022ன்படி அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி கட்டண விபரம் மாவட்ட அரசிதழில் அச்சிடுவதற்கு பக்கம் ஒன்றிற்கு ரூ.2100/- வீதம் 6 பக்கங்களுக்கு ரூ.12600/- கருவூலத்தில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :-** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.750/2022/எச்1)

**பொருள் : 4**

காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 சத்யசாய் நகர் பகுதிக்கு அருகில் உள்ள புத்தர் நகர் (ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்ட இடம்) பகுதிக்கு அடிப்படை வசதிகளாக தெருவிளக்கு வசதி வேண்டி புத்தர் நகர் பகுதி பொது மக்களால் மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களுக்கும் நகராட்சி அலுவலகத்திற்கு விண்ணப்பம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 22.06.2022ம் தேதி தொலைபேசியில் நேரடியாக அறிவுறுத்தப்பட்டதன்பேரில், மேற்படி பகுதிக்கு புதிதாக 12 கம்பங்கள் அமைத்து 12 புதிய தெருவிளக்குகள் அமைக்க தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி விண்ணப்பத்தின்பேரில் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தால் தொகை ரூ.2,02,265/- மதிப்பீட்டு தொகை செலுத்த கேட்டு கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி கேட்பு தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.எ.எண்.336/2020/அ1)

**பொருள் : 5**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான கோவை-மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடையில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்த பேட்டரி பழுது ஏற்பட்டதை மாற்றி புதிதாக வாங்கி பொருத்த கடந்த 07.07.2022ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகள் வழங்கிய ஜெி.பி.ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், காரமடை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விபரம் | விலைப்புள்ளிகளின் விபரம் | | |
|---|---|---|---|---|
| | | தி/வா.ஜெ.பி.ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், 50/17எ, காந்தி நகர், அத்வைத் அவென்யூ எதிரில், காரமடை. | தி/வா.ஸ்ரீ குருவாயூரப்பா ஆட்டோ எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், கண்ணார்பாளையம், காரமடை. | தி/வா.பி.வி. ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், மேட்டுப்பாளையம் ரோடு, காரமடை. |
| 1 | New Amaron Toll UPS Battery | ரூ.15500/- | ரூ.17000/- | ரூ.16100/- |

**அ.கு :-** 1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.எ.எண்.1484/2022/எச்1)

**<u>பொருள் : 6</u>**

காரமடை நகராட்சியில் பொது நிதி 2022–23ன் கீழ் 21.07.2022ம் தேதியில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.18 சிறுமுகை ரோடு பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் செப்டிக்டேங் கட்டுதல் மற்றும் சீரமைப்பு பணி மேற்கொள்ளுதல். | 3.50 | திரு.டி.செல்வன் | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.எஸ்.சந்திரன் | 3.12% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2. | காரமடை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.06 குட்டையூர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் சீரமைப்பு பணி மேற்கொள்ளுதல். | 3.50 | திரு.டி.செல்வன் | 0.05% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.எஸ்.சந்திரன் | 3.45% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3. | காரமடை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.24 காமராஜர் சாலை பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் சீரமைப்பு பணி செய்தல் மற்றும் தடுப்புசுவர் கட்டுதல். | 10.00 | திரு.டி.செல்வன் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.எஸ்.சந்திரன் | 3.11% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4. | HDPE Hose சப்ளை செய்து விஸ்தரிப்பு செய்தல். | 5.00 | திரு.ஆர்.எ.குப்புசாமி | 0.06% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | தி/வா.ஸ்ரீதவமணி என்டர்பிரைசஸ் | 3.46% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5. | வார்டு எண்.19ல் உள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் வடிகால் கவர்ஸ்லேப் அமைத்தல். | 1.50 | திரு.வி.செல்வராஜ் | 0.05% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.டி.ராதாகிருஷ்ணன் | 3.89% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 6. | காரமடை நகராட்சி நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர்உந்து நிலையங்களில் எலக்ட்ரோ மேக்னெடிக் ஃபுளோ மீட்டர் சப்ளை செய்து பொருத்துதல். | 10.00 | தி/வா.ஆல்கெம் இன்டஸ்ட்ரீஸ் | 0.07% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | தி/வா.ஸ்ரீ பவர் இன்ஜினியர்ஸ் | 4.26% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 7. | காரமடை நகராட்சி அனைத்து வார்டுகளில் JCB மற்றும் Tipper வாகனங்களை பயன்படுத்தி மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல். | 5.00 | தி/வா.ஸ்ரீ வீரபத்திரசுவாமி டிரேடர்ஸ் | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | தி/வா.எஸ்.வி.டி. டிரேடார்ஸ் | 3.30% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு குறைவாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.1804/2022/இ1)

**பொருள் : 7**

காரமடை நகராட்சியில் பொது நிதி 2022–23ன் கீழ் 21.07.2022ம் தேதியில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | பொது சுகாதார வாகனம் TN 40 4033 பழுது சரிபார்த்தல் | 2.00 | பெஸ்ட் மோட்டார் ஒர்க்ஸ் | 1,94,100/– |
| | | | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர் | 2,34,800/– |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு குறைவாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.1804/2022/இ1)

**பொருள் : 8**

காரமடை பேரூராட்சி தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் இந்நகராட்சியில் உள்ள ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் பிறப்பு இறப்பு தொடர்பான பதிவேடுகள், அறிக்கைகள் ஆகியவற்றை கணினியில் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் இவ்வலுவலகத்திற்கு புதிதாக இருக்கை எழுத்தர்கள் மற்றும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு பணிபுரிய கணினி அவசியமாகிறது. மேலும் தற்போதுள்ள கணினிகள் போதுமானதாக இல்லாததால் புதிதாக 4 எண்கள் கணினி, 4 எண்கள் பிரிண்டர், 8 எண்கள் டோனர் (88A), 10 எண்கள் Antivirus ஆகியவை வாங்க ஆகும் செலவினம் ரூ.5.70/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :- 1)** அனுமதி வழங்கலாம்.
**2)** அலுவலக நிர்வாக நலன் கருதி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.எ.எண்.1876/2022/இ1)

**<u>பொருள் : 9</u>**

காரமடை நகராட்சியில் தற்போது அனைத்து ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. தற்போது 14 எண்கள் கணினி மற்றும் 12 எண்கள் பிரிண்டர்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மேற்கண்ட கணினிகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், இவற்றிற்கு Antivirus பதிவேற்றம் செய்யவும், மேலும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும் (Including spare parts) ஆகும் செலவினம் ரூ.1.60/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு :-</u> 1)** அனுமதி வழங்கலாம்.

2) அலுவலக நிர்வாக நலன் கருதி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.எ.எண்.1877/2022/இ1)

**<u>பொருள் : 10</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 03.07.2022 ம் தேதியன்று நகர்ப்புற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாநாடு நடத்தப்படுவது தொடர்பான விளம்பரம் மாலை முரசு, தினகரன் ஆகிய நாளிதழ்களில் வெளியிட்ட வகையில் திருவாளர்.கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ், கோவை நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.3,36,840/- நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**<u>அ.கு :-</u>** அனுமதி வழங்கலாம்.

(ந.எ.எண்.1806/2022/இ1)

**<u>பொருள் : 11</u>**

காரமடை நகராட்சியில் கோவை-மேட்டுப்பாளையம் சாலை ஆர்.வி.நகர் கல்லூரி முதல் சொசைட்டி காலனி வரை சாலை விரிவாக்கம் பணிகள் மேற்கொள்ளும்போது அப்பகுதியில் இருந்த குடிநீர் குழாய்கள் 3” PVC மற்றும் 4” C.I குழாய்கள் முழுவதும் சேதமடைந்து குடிநீர் விநியோகம் தடைபட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் புதிதாக 4” C.I குழாய் 210 மீட்டர் நீளத்திற்கு பதித்து குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.5.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு :-</u> 1)** அனுமதி வழங்கலாம்.

2) குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(ந.எ.எண்.1859/2022/இ1)

**<u>பொருள் : 12</u>**

காரமடை நகராட்சியில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு 17 இடங்களில் சமுதாய கழிப்பிடம் கட்டி பயன்பாட்டில் உள்ளது. நல்ல முறையில் இயங்கும் 12 கழிப்பிடத்தின் செப்டிக் டேங்க் 3 மாதத்திலிருந்து 4 மாத்திற்குள் நிறைந்துவிடுகிறது. செப்டிக் டேங்க் கழிவுகளை உறிஞ்சி எடுக்க நம் நகராட்சியில் கழிவு நீர் உறிஞ்சும் வாகனம் இல்லை என்பதால் தனியார் கழிவுநீர் வாகனங்களை அனுமதிக்க வேண்டியுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கொண்டு சேர்க்கப்படவும், தொட்டியை சுத்தம் செய்யவும் ஒரு முறைக்கு ரூ.18,000/- முதல் ரூ.26,000/- செலவினம் ஏற்படுகிறது. எனவே கழிவுநீர் தொட்டி உடன் சுத்தம் செய்யும் வகையில் ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யவும், இதற்கு முன்பு 08.06.2022 அன்று குட்டையூர் பாவேந்தர் நகர் மற்றும் குளத்துப்பாளையம் ஆகிய இரு இடங்களிலும், 15.07.2022 அன்று சைக்கிள்கடை ராமசாமி சந்து கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.30,800/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு :-</u> 1)** அனுமதி வழங்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி ரூ.2,30,800/-யை பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1882/2022/எச்1)

**பொருள் : 13**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான TN 40 D 4125 அபே வாகனம் பழுது சரிசெய்ய அரசு பதிவு பெற்ற பணிமனையில் உத்தேச மதிப்பீடு கோரும்போது வாகனத்தின் சேஸ் கட்டாகி சென்சார் வாகனம் என்பதால் மேற்படி வாகனத்தை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.60 இலட்த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :- 1)** அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1880/2022/எச்1)

**பொருள் : 14**

காரமடை நகராட்சி 19.827 ச.கி.மீ பரப்பளவும், 27 வார்டுகள் கொண்ட நகராட்சியாகும். தற்போது பெய்துவரும் பருவமழையின் காரணமாக ஏற்படும் கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தவும், முதிர் கொசுக்களால் பரவும் கொடிய நோயான டெங்கு நோயினை தடுக்கவும் நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் இரண்டு டெங்கு கொசு ஒழிப்பு புகை தெளிப்பான் இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், காரமடை நகராட்சியானது அதிக பரப்பளவு கொண்டுள்ளதால் பழைய இயந்திரம் கொண்டு இயக்க முடியாததால் வாரம் ஒரு முறை புகை மருந்து அடிக்க ஏதுவாக Vehicle Mount Fogging Machine – 1 எண்ணிக்கை வாங்கவும், காய்ச்சல் கண்ட வீடுகளில் உள்புறம் அடிக்க Hand Fogging Machine – 10 எண்ணிக்கை வாங்கவும், Vehicle Mount Fogging Machine பொருத்துவதற்கு -1 பேட்டரி வாகனம் (BOV) வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** பொது சுகாதார அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1784/2022/எச்1)

**பொருள் : 15**

காரமடை நகராட்சி 27 வார்டு பகுதிகளில் திடக்கழிவு சேகரம் செய்ய 63 தள்ளுவண்டிகள் தேவையுள்ள நிலையில் 32 வண்டிகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. மீதம் 31 வண்டிகள் சக்கரம் இல்லாமலும், பழுதுகள் ஏற்பட்டுள்ளதாலும் வீடு வீடாக கழிவுகள் சேகரம் செய்யும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே பேட்டரி வாகனம் வாங்கும் வரை பழுது ஏற்பட்டுள்ள 31 தள்ளுவண்டிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ளவும், அதே வேலையில் 30 தள்ளுவண்டிகள் வாங்கினால் ரூ.7.50 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும் என்பதால் பழைய தள்ளுவண்டிகள் சரிசெய்யவும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :- 1)** அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1798/2022/எச்1)

## பொருள் : 16

காரமடை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகை இனங்கள் 28.06.2022ம் தேதி (7ஆம் அழைப்பு) காரமடை நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டதில் அதிக தொகைக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்களுக்கு ஏல இனம் ஊர்ஜிதம் செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | 2021-2022ம் ஆண்டு ஏலத் தொகை (ரூ) | அதிகபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.05 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 38400 (3200x12) | மாத வாடகை ரூ.3400/- வீதம் வருட வாடகை ரூ.40,800/- ஒப்பந்தப்புள்ளி (7ஆம் அழைப்பு) | திரு.பிரதாப் (ஒப்பந்தப்புள்ளி) | சென்ற வருட ஏலத் தொகையிலிருந்து ரூ.2400/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம். |

**<u>அ.கு :-</u>** மேற்கண்ட ஏல இனம் 7 அழைப்புகள் கோரப்பட்டதில் 7ம் அழைப்பில் மேற்கண்ட கடைக்கு அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் கலம் 4ல் குறிப்பிட்டுள்ளபடி ஏல இனம் ஊர்ஜிதம் செய்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.559/2022/அ1)

## பொருள் : 17

காரமடை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகை இனங்கள் 19.07.2022ம் தேதி (9ஆம் அழைப்பு) காரமடை நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டதில் அதிக தொகைக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்களுக்கு ஏல இனம் ஊர்ஜிதம் செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | 2021-2022ம் ஆண்டு ஏலத் தொகை (ரூ) | அதிகபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.07 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 52176 (4348/12) | மாத வாடகை ரூ.4550/- வீதம் வருட வாடகை ரூ.54600/- ஒப்பந்தப்புள்ளி (9ஆம் அழைப்பு) | திரு.மோகன் (ஒப்பந்தப்புள்ளி) | சென்ற வருட ஏலத் தொகையிலிருந்து ரூ.2424/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம். |

**<u>அ.கு :-</u>** மேற்கண்ட ஏல இனம் 9 அழைப்புகள் கோரப்பட்டதில் 9ம் அழைப்பில் மேற்கண்ட கடைக்கு அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் கலம் 4ல் குறிப்பிட்டுள்ளபடி ஏல இனம் ஊர்ஜிதம் செய்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.559/2022/அ1)

<u>பொருள் : 18</u>

காரமடை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகை இனங்கள் 21.07.2022ம் தேதி (முதல் அழைப்பு) காரமடை நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டதில் அதிக தொகைக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்களுக்கு ஏல இனம் ஊர்ஜிதம் செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | 2016-2017ம் ஆண்டு ஏலத் தொகை (ரூ) | அதிகபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பள்ளிவாசல் வீதி கறிக்கடை எண்.07 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 42900 | மாத வாடகை ரூ.4400/- வீதம் வருட வாடகை ரூ.52800/- ஒப்பந்தப்புள்ளி (முதல் அழைப்பு) | திரு.முகமது சமீர் (ஒப்பந்தப்புள்ளி) | சென்ற ஒரு வருட ஏலத் தொகையி லிருந்து ரூ.9900/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம். |

**<u>அ.கு :-</u>** மேற்கண்ட இனம் அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் கலம் 4ல் குறிப்பிட்டுள்ளபடி ஏல இனம் ஊர்ஜிதம் செய்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.559/2022/அ1)

<u>பொருள் : 19</u>

நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு கழிவுகள் சேகரம் செய்து உரக்கிடங்கில் ஒப்படைக்க ஸ்ரீ வீரபத்திரசாமி டிரேடர்ஸ் நிறுவனத்தின் மூலம் 2 டிராக்டர் தின வாடகை முறையில் ஒப்பந்தம் செய்து இயக்கப்பட்டு வருகிறது. இதற்கு மாதம் ஒரு முறை பட்டியல் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 01.06.2022 முதல் 30.06.2022 வரை TN 40 R 0742 மற்றும் TN 40 P 2694 என இரு வாகனங்கள் இயக்கப்பட்டதற்கு பட்டியல் தொகை கோரி விண்ணப்பத்தின்படி,

| | |
|---|---|
| 1) ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகை | ரூ.2,54,400/- |
| 2) மேற்படி பணிக்காக மன்றம் அனுமதிக்கப்பட்ட தொகை | ரூ.9,75,000/- |
| 3) முந்தைய மாதங்களில் வழங்கப்பட்ட தொகை | ரூ.8,65,400/- |
| | ------------------ |
| மீதம் இருப்பு | ரூ.1,11,600/- |
| | ------------------ |

தற்போது ஒப்பந்ததாரர் கோரியுள்ள ஜுன்-2022 பட்டியல் தொகை ரூ.2,54,400/- அனுமதிக்கப்பட்ட தொகையில் கையிருப்பு தொகை ரூ.1,11,600/- கூடுதல் ஏற்பட்ட செலவினத்தொகை ரூ.1,50,000/- மன்ற அனுமதி வேண்டியுள்ளதால் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு :-</u>** 1) பொது சுகாதாரத்தின் அவசியத்தினை கருத்தில் கொண்டு அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1929/2022/எச்1)

**பொருள் : 20**

காரமடை நகராட்சியில் கழிவு நீர் அகற்ற பயன்படுத்தப்பட்டு வந்த மின்மோட்டார் (2 HP) பழுது ஏற்பட்டுள்ளதால் இயக்க முடியாமல் உள்ளது. தற்போது மழைக்காலம் என்பதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி உடன் பழுது நீக்கம் செய்யவும், உத்தேச செலவினம் ரூ.10,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** 1) அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1799/2022/எச்1)

**பொருள் : 21**

காரமடை நகராட்சி 19.827 ச.கி.மீ பரப்பளவில் 16500 வீடுகள் 30 கிராமங்களை உள்ளடக்கிய 246 தெருக்கள் உள்ளன. வீதிகளில் இருபுறமும் புற்செடிகள் அதிகளவில் வளர்கின்றன. இவற்றை வெட்டுவதற்கு தற்போது நகராட்சியில் 5 புல்வெட்டும் இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளது. இவற்றில் புல்வெட்டும் இயந்திரம் அடிப்பகுதியில் உள்ள ஒயர் அடிக்கடி பழுது எற்படுவதால் மேற்படி ஒயர் கையிருப்பு வைக்க வேண்டியுள்ளதால் அல்லது தேவைப்படும் போது உடன் வழங்கவும் பின்பு பட்டியல் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளும் வகையில் செலவினத் தொகை ரூ.60,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** 1) அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1822/2022/எச்1)

**பொருள் : 22**

காரமடை நகராட்சிக்கு 4 எண்கள் தமிழ் தினசரி நாளிதழ்கள் 01.08.2022 முதல் ஒரு வருட காலத்திற்கு விநியோகம் செய்ய ஆகும் செலவினம் ரூ.12,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** 1) அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1909/2022/இ1)

**பொருள் : 23**

காரமடை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளில் பழுது ஏற்பட்டுள்ள 30W LED விளக்குகள் சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ.1.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** 1) அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1908/2022/இ1)

**<u>பொருள் : 24</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு மின் கம்பங்களில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள தானியங்கி சுவிட்சுகள் பழுதடைந்துள்ளது. எனவே இவற்றை சரிசெய்யவும், தானியங்கி சுவிட்சுகளை பராமரிக்கவும் ஆகும் செலவினம் ரூ.1.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு :-</u> 1)** அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்.1908/2022/இ1)**

**<u>பொருள் : 25</u>**

காரமடை நகராட்சி பகுதியில் கழிப்பிடம் இல்லாத வீடுகளில் தனிநபர் கழிப்பிடம் கட்டிக்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18856/2022/தூஇதி2, நாள்.13.07.2022 ன்படி 72 பயனாளிகளுக்கு அனுமதி வரப்பெற்றுள்ளது. பயனாளிகளை தேர்வு செய்து தனிநபர் கழிப்பிடம் கட்டிக்கொள்ளவும் அவர்களுக்கு அரசு அறிவித்த ஒரு நபருக்கான மானியத் தொகை ரூ.9334/- (மத்திய அரசு மான்யம் ரூ.4000/-, மாநில அரசு மான்யம் ரூ.2667/-, காரமடை நகராட்சியின் பங்களிப்பு ரூ.2667/- வீதத்தில்) 72 x 9334 = 6,72,048/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு :-</u> 1)** அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்.1927/2022/எச்1)**

**<u>பொருள் : 26</u>**

காரமடை நகராட்சி அலுவலக வளாகத்தில் மூங்கில் மர தூர் அகற்றப்பட்டு 37 மரங்கள் உள்ளன. உள்ளூரில் மூங்கில் கூடை பின்னும் நபர்கள் வசம் கேட்டபோது அதிகபட்சமாக ரூ.4000/-க்கு எடுத்து கொள்வதாக தெரிவித்துள்ளனர். திறந்தவெளியில் மரம் கிடப்பதால் பாதுகாப்பு இல்லை. எனவே மேற்படி மரங்கள் விற்பனை குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**<u>அ.கு :-</u> 1)** அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்.1928/2022/எச்1)**

**<u>பொருள் : 27</u>**

திருமதி.ரா.பிரியா, 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

**1)** சேரன் நகர்-2 தனசேகர் வீடு அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து 4000 லிட் சின்டெக்ஸ் டேங்க் வைத்து உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
**2)** சேரன் நகர்-2 விநாயகர் கோயில் எதிர்புறம் பிரபு வீடு முதல் லிசாரவி வீடு வரை இடபுறம் உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்து பொது குழாய் அமைத்தல்.

**பொருள் : 28**

திரு.கே.ஜி.குருபிரசாத், 2வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சிவன்புரம் காலனி மற்றும் ரங்கராஜ் லே-அவுட் பகுதியில் 10,000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
2) கல்யாணி கார்டன் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்து உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
3) ரங்கராஜ் லே-அவுட் பகுதியில் வடிகால் வசதி கட்டுதல்.

**பொருள் : 29**

திரு.கே.ரவிக்குமார், 5வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) மணிகண்டன் நகர் முதல் ராயல்கார்டன், பாலதண்டாயுதம் நகர் வரை ஏற்கனவே உள்ள 2" குழாயை மாற்றி 3" குழாய் அமைத்தல்.
2) ராயல் கார்டன் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து, சின்டெக்ஸ் அமைத்து குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
3) பொன்விழா நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறு சீரமைப்பு செய்து, சின்டெக்ஸ் அமைத்து குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
4) மெட்ரோ பள்ளி அருகில், வி.ஐ.பி.நகர், பொன்விழா நகர் அனைத்து வீதிகள் மற்றும் வெற்றி லே-அவுட் ஆகிய பகுதிகளில் வடிகால் கட்டுதல்.
5) வி.ஐ.பி.நகர் -2 மற்றும் பொன்விழா நகர்-1 ஆகிய 3 பகுதிகளின் முகப்புகளில் 3 தெருவிளக்குகள் அமைத்தல்.
6) செம்மொழி நகருக்கு பொன்விழா நகரிலிருந்து செல்லும் 2" குழாயை மாற்றி 3" குழாய் அமைத்தல்.
7) மணிகண்டன் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து, சின்டெக்ஸ் அமைத்து குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

**பொருள் : 30**

திரு.மா.ராமமூர்த்தி, 6வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) ராமச்சந்திரா நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்து உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
2) டாக்டர்.கலைஞர் நகர் மற்றும் குறிஞ்சி நகர் பகுதிக்கு குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
3) டாக்டர்.கலைஞர் நகர் மற்றும் குறிஞ்சி நகர் பகுதியில் 10 புதிய தெருவிளக்குகள் அமைத்தல்.

**<u>பொருள் : 31</u>**

திரு.மா.ரங்கசாமி, 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) நேரு நகர் மற்றும் ஜீவானந்தபுரம் பகுதியில் வடிகால் கட்டுதல்.

2) ஜீவானந்தபுரம் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

3) குறிஞ்சி நகர் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

4) கொங்கு மண்டபம் பின்புறம் வடிகால் கட்டுதல்.

5) நேரு நகர் பூங்காவில் உள்ள சின்டெக்ஸ் பழுதடைந்துள்ளதை மாற்றி புதியதாக 5000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்.

**<u>பொருள் : 32</u>**

திரு.லோ.கமல்குமார், 8வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) அன்பு நகர் பகுதி முழுவதும் கழிவு நீர் வடிகால் கட்டுதல்.

2) வடமங்கலக்கரை சமுதாய கழிப்பிடம் சீரமைத்தல்.

**<u>பொருள் : 33</u>**

திருமதி.ரேவதி ஜெய்கிருஷ்ணராஜ், 11வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) எஸ்.என்.ஆர்.வி.நகர் மற்றும் பொன்னம்மாள் கார்டன் பகுதியில் உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

2) யுரேகா கார்டன் பகுதியில் பூங்கா சீரமைப்பு செய்யப்பட்டு முடிவுற்றதை திறப்பு விழா செய்தல்.

3) பொன்னம்மாள் கார்டன் முதல் வீதியில் மாணிக்க விநாயகர் கோயில் அருகில் வடிகால் நீர் சென்றடைவதற்கு வழிவகை செய்தல்.

**<u>பொருள் : 34</u>**

திருமதி.அமுதவேணி கிருஷ்ணமூர்த்தி, 12வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) இந்திரா நகர் மற்றும் கணேஷ் நகர் பகுதியில் வடிகால் வசதி செய்தல்.

2) கணேஷ் நகர் பூங்காவில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறு சீரமைப்பு பணி செய்து குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

3) இந்திரா நகர் பகுதியில் உள்ள மேல்நிலைத்தொட்டியை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்து சீரமைப்பு பணி செய்தல்.

4) இந்திரா நகர், கணேஷ் நகர் மற்றும் பாலாஜி நகர் பகுதிகளில் 15 தெருவிளக்குகள் அமைத்தல்.

5) கணேஷ் நகர் மூர்த்தி வீடு முதல் நஞ்சப்பன் வீடு வரை ஏற்கனவே உள்ள 1 1/2” குழாயை மாற்றி 3” குழாய் அமைத்தல்.

6) கணேஷ் நகர் கார்த்தி வீடு முதல் சாந்தா வீடு வரை 1 1/2” குழாயை மாற்றி 3” குழாய் அமைத்தல்.

**<u>பொருள் : 35</u>**

திரு.ஆர்.தியாகராஜன், 13வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) பூம்புகார் நகர் பகுதிக்கு உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
2) ஜெ.ஜெ.நகர் பகுதி சீரமைப்பு பணி செய்தல்.
3) மூகாம்பிகை நகர், தேவி நகர் பகுதியில் மண்சாலை தார்சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.
4) நல்வர்நகர் பகுதியில் மண்சாலை தார்சாலை மற்றும் வடிகால் அமைத்தல்.
5) பூம்புகார் நகர் பகுதியில் வடிகால் கட்டுதல்.
6) 13வது வார்டு பகுதிகளில் புதிதாக 7 மின்கம்பங்கள் அமைத்தல்.

**<u>பொருள் : 36</u>**

திருமதி.நித்யா சோமசுந்தரம், 15வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) 15வது வார்டு பகுதியில் 10 புதிய மின்கம்பங்கள் அமைத்து 47 தெருவிளக்குகள் பொருத்துதல்.
2) மங்கலக்கரைப்புதூர் சமுதாய கழிப்பிடம் சீரமைப்பு பணி செய்தல்.
3) வெங்கடேஸ்வரா புளூ மெட்டல் செல்லும் வழியில் உள்ள சமுதாய கழிப்பிடம் சீரமைப்பு பணி செய்தல்.
4) அப்துல்கலாம் திடல் சுற்றியுள்ள வீட்டு மனை பகுதிகளுக்கு “கலைஞர் நகர்” என பெயர் சூட்டுதல்.
5) கொன்னமேடு சந்தில் வடிகால் சீரமைப்பு பணி செய்தல்.
6) ஸ்டார் ரெசார்டிலிருந்து மங்கலக்கரைப்புதூர் செல்லும் வழியில் (கார்னர்) உள்ள சிறுபாலத்தை அகலப்படுத்துதல்.

**<u>பொருள் : 37</u>**

திருமதி.கவிதா நடராஜன், 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) முல்லை நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு தண்ணீர் குழாயில் தண்ணீர் சரியாக வராததால் 2” குழாய்களை மாற்றி 3” குழாய்களை பொருத்துதல்.
2) முல்லை நகர் பகுதிக்கு கழிவு நீர் வடிகால் கட்டுதல்.
3) முல்லை நகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைத்தல்.
4) குளத்துப்பாளையம் பகுதியில் தற்போது பயன்பாட்டில் உள்ள சமுதாய கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதை அகற்றி புதிய கழிப்பிடம் கட்டுதல்.
5) குளத்துப்பாளையம் விநாயகர் கோயில் பகுதியில் சுற்றுச்சுவர் மற்றும் சிறிய பாலம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.
6) கொண்டசாமி நாயுடு நகர் பகுதியில் கழிவு நீர் வடிகால் கட்டுதல்.
7) பயனீர் எஸ்டேட் பகுதியில் தார்சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் கட்டுதல்.

**<u>பொருள் : 38</u>**

திருமதி.வெ.மலர்கொடி சுகேந்திரன், 17வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) அம்பேத்கர் நகர் சமுதாய நலக்கூடத்தில் குடிநீர் வசதி மற்றும் சீரமைப்பு பணிகள் செய்தல்.

2) அம்பேத்கர் நகர் பகுதியில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து 5000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விஸ்தரிப்பு செய்தல்.

3) அம்பேத்கர் நகர் சமுதாய கழிப்பிடம் சீரமைப்பு பணி மற்றும் மதில் சுவர் கட்டுதல்.

4) சாஸ்திரி நகர் மற்றும் பட்டிக்காரன்பாளையம் சமுதாய கழிப்பிடம் சீரமைத்தல்.

5) 17வது வார்டு பகுதியில் 14 புதிய மின்கம்பங்கள் அமைத்து 35 தெருவிளக்குகள் பொருத்துதல்.

6) சாஸ்திரி நகர் சமுதாய கழிப்பிடம் அருகில் 5000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் பொருத்தி உப்புநீர் விஸ்தரிப்பு செய்தல்.

7) பட்டிக்காரன்பாளையம் பகுதியில் ஏற்கனவே உள்ள உப்புநீர் சின்டெக்ஸ் டேங்கிற்கு கான்கிரீட் மேடை அமைத்தல்.

**<u>பொருள் : 39</u>**

திருமதி.எஸ்.சாந்தி, 18வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) கே.ஆர்.நகர் மாரியம்மாள் வீடு முதல் கலாமணி வீடு வரை வடிகால் கட்டுதல்.

2) கே.ஆர்.நகர் பகுதியில் தார்சாலை அமைத்தல்.

3) சிறுமுகை ரோடு பகுதியில் செல்வம் நீலாவதி வீடு முதல் ராதா ராமசாமி வீடு வரை வடிகால் சீரமைத்தல்.

4) கே.ஆர்.நகர் பகுதியில் 2 புதிய மின் கம்பம் அமைத்து 2 தெருவிளக்குகள் பொருத்துதல்.

5) சிறுமுகை ரோடு பகுதியில் மரகதம் ரங்கராஜு வீட்டின் அருகே 1 புதிய மின் கம்பம் அமைத்து 1 தெருவிளக்கு பொருத்துதல்.

6) பிள்ளையார் கோவில் வீதி மற்றும் நீலபோயன் சந்து பகுதியில் 2 சோலார் விளக்குகள் அமைத்தல்.

7) சிறுமுகை ரோடு பகுதியில் உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

**<u>பொருள் : 40</u>**

திரு.கே.ஆர்.விக்னேஷ், 20வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) மாட்டுக்கடை ரோடு நந்தகோபால் வீடு முதல் தங்கவேல் வீடு வரை மற்றும் ஊர்கவுடர் வீதியில் கோவிந்தராஜ் வீடு வரை வடிகால் கட்டுதல்.

2) பெள்ளாதி ரோடு நுலகம் பின்புறம் உள்ள வடிகாலுக்கு செல்லும் கிளை வடிகால் ராஜன் வீடு முதல் மனோன்மணி வீடு வரை சீராக இல்லாமல் உள்ளதை சீரமைத்தல்.

3) கெம்பஜ்ஜ கவுடர் வீதியில் உள்ள ஆழ்துளை கிணறு மின்மோட்டார் 2HP உள்ளதை 5HP ஆக மாற்றி தர்சகிரி சந்து வரை உப்புநீர் விஸ்தரிப்பு செய்தல்.

4) காரமடை தேர்நிலை முதல் எம்.கே.கே.நகர் வரை உள்ள தார்சாலை சீரமைத்தல்.

**<u>பொருள் : 41</u>**

திருமதி.மல்லிகா ஸ்ரீதர், 21வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) கண்ணார்பாளையம் ரோடு நியாயவிலை கடை கட்டுதல்.
2) பாரதியார் நகர் மற்றும் அண்ணா வீதியில் சிறுபாலம் மற்றும் தார்சாலை சீரமைத்தல்.
3) கண்ணார்பாளையம் ரோடு கே.சு.மணியம் வீட்டு முன்புறம் சிறுபாலம் சீரமைத்தல்.
4) ஓம்சக்தி கோயில் பின்புறம் உள்ள வடிகால் மேல் கவர் சிலேப் அமைத்தல்.
5) அண்ணா வீதியில் உப்புநீர் சின்டெக்ஸ் டேங்க் பழுதடைந்துள்ளதை சரிசெய்தல்.
6) பாரதியார் நகர் மற்றும் கண்ணார்பாளையம் ரோட்டில் உப்புநீர் விஸ்தரிப்பு செய்தல்.
7) பாரதியார் நகர் பகுதியில் 5 தெருவிளக்குகள் அமைத்தல்.

**<u>பொருள் : 42</u>**

திருமதி.மஞ்சுளாதேவி ராஜகோபால், 22வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) தோப்புரங்கசாமி முதலியார் சந்தில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் கட்டுதல்.
2) மாட்டுக்கடை ரோடு பகுதியில் தார்சாலை அமைத்தல்.
3) நேசனல் ரங்கசாமி முதலியார் சந்தில் 5000 லிட் சின்டெக்ஸ் டேங்க் வைத்து உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
4) அட்டியண்ணகவுடர் சந்தில் 2 எண்ணிக்கை தெருவிளக்குகள் அமைத்தல்.
5) மணியம்செட்டியார் சந்தில் வடிகால் மற்றும் கான்கிரீட் சாலை சீரமைத்தல்.

**<u>பொருள் : 43</u>**

திருமதி.அனிதா செந்தில்குமார், 25வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) குந்தா காலனி டி.ஆர்.எஸ்.பேலஸ், மகாலட்சுமி நகர் மற்றும் திரு.வி.நகர் தார்சாலை அமைத்தல் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைத்தல்.
2) மணிவிலாஸ் சந்து பகுதியில் தார்சாலை சீரமைத்தல் மற்றும் வடிகால் சீரமைத்தல்.
3) மணிவிலாஸ் சந்து பகுதியில் 1 புதிய மின் கம்பம் அமைத்து 1 தெருவிளக்கு அமைத்தல்.
4) குட்சபொர்டு சந்தில் தார்சாலை சீரமைத்தல் மற்றும் வடிகால் சீரமைத்தல்.
5) அண்ணா நகர் பகுதியில் வடிகால் சீரமைத்தல்.

**<u>பொருள் : 44</u>**

திருமதி.சித்ரா ஸ்டீபன் எபினேசர், 26வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) குலாலபுரம் மேல்நிலைத்தொட்டிக்கு சுற்றுச்சுவர் அமைத்து சீரமைப்பு பணி செய்தல்.
2) கே.ஆர்.காலனி தரைமட்டத்தில் உள்ள பெரிய குழியை பொது மக்கள் நலன் கருதி மண்கொண்டு நிரப்புதல்.
3) அண்ணாமலை முதலியார் சந்தில் பொது பாதையை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அகற்றி பாதை அமைத்து தருதல்.

4) அண்ணாமலை முதலியார் வீதி, சிவலிங்க முதலியார் வீதி, கே.ஆர்.காலனி, குறிஞ்சி நகர் மற்றும் குலாலபுரம் பகுதியில் ஏற்கனவே உள்ள வடிகால் சீரமைத்தல் மற்றும் வடிகால் கட்டுதல்.

5) கே.ஆர்.காலனி, அண்ணாமலை முதலியார் வீதி மற்றும் கோவை-மேட்டுப்பாளையம் ரோடு பகுதியில் உப்புநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

**<u>பொருள் : 45</u>**

திருமதி.எஸ்.வனிதா சஞ்சீவ் காந்தி, 27வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) ஆர்.வி.நகரில் சாக்கடை வசதி.

2) ராமலிங்கம் வீட்டிலிருந்து சாய் கார்டன் வரை சாக்கடை வசதி.

3) ஏ.ஜி.நகர் மணியண்ணன் வீடு முதல் அண்ணாமலை வீடு வரை சாக்கடை வசதி.

4) அரவிந்தர் காலனி பாலன் வீட்டிலிருந்து நாகராஜ் வீடு வரை சாக்கடை வசதி.

5) ஏ.ஜி.நகரில் ரகுநாதன் வீடு அருகில் தெருவிளக்கு.

**<u>பொருள் : 46</u>**

திருமதி.மல்லிகா ஜெய்பிரகாஷ், நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் 10வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) 10வது வார்டு பகுதியில் 7 மின்கம்பங்கள் மற்றும் 30 தெருவிளக்குகள் அமைத்தல்.

2) சவிதா மருத்துவமனை முதல் ஜோதி வீடு வரை, சாந்தாமணி வீடு முதல் எஸ்.ஆர்.எஸ்.ஐ.கேட் வரை, செல்வா மெடிக்கல்ஸ் முதல் பாக்கியராஜ் வீடு வரை, இராஜப்பன் வீடு முதல் எஸ்.வி.ஜி.வி.Principal வீடு வரை 2” குழாயை மாற்றி 3” குழாய் மாற்றியமைத்தல்.

3) இ.பி.காலனி பகுதியில் புதிதாக போர்வெல் அமைத்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.

4) ஆர்.கே.நகர் பகுதியில் கழிவுநீர் கால்வாய் திட்டம் ஏற்படுத்துதல்.

5) தினேஷ் அவென்யூ ரிசர்வ் சைட்டில் குழந்தைகள் விளையாட்டு மைதானம் அமைத்தல்.

**<u>பொருள் : 47</u>**

திருமதி.வெ.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சஞ்சய் காந்தி நகர் பகுதியில் வடிகால் கட்டுதல்.

2) ரங்கைய கவுடர் சந்தில் வடிகால் கட்டுதல்.

3) 27 வார்டுகளில் குடிநீர் விஸ்தரிப்பு பணிக்காக தோண்டப்பட்ட சாலைகள் மற்றும் இயற்கை சீற்றத்தால் பழுதடைந்த தார்சாலைகள் மற்றும் கான்கிரீட் சாலைகளை சீரமைத்தல்.

4) மீனாட்சி அவென்யூவில் துவங்கப்பட்ட பூங்கா பணியினை விரைவில் முடித்து தருதல்.

**பொருள் : 48**

திருமதி.செண்பகம் முத்துசுப்ரமணியம், 23வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சொர்க்கவாசல் தனம்மா பூக்கடை முதல் மேற்கு ரத வீதி வரை வடிகால் கட்டுதல்.

2) சாமண்ணகவுடர் சந்து முதல் சொர்க்கவாசல் ரோடு வரை வடிகால் கட்டுதல்.

3) வாணியர் வீதி பானு வீடு முதல் சிறுமுகை ரோடு வரை வடிகால் கட்டுதல்.

4) கோவிந்தபோயன் சந்து ஜீவரத்தினம் அவர்கள் வீட்டு முன்புறம் வடிகால் சீரமைப்பு செய்து சிறுபாலம் அமைத்தல்.

V. Muthuvenkatesh

நகரமன்றத் தலைவர்

காரமடை நகரமன்றம்

**29.07.2022 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

**பொருள் எண்.01**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.02**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.03**

அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.04 முதல் 25 முடிய**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.26 முடிய**

75வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அனைத்து குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களுக்கு தேசி கொடி வழங்க உள்ளதால் இம்மூங்கில் மரதூர் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.27**

அனுமதிக்கப்பட்டது. ஏற்று கொள்ளப்பட்டது.

**பொருள் எண்.28 முதல் 46 முடிய**

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**பொருள் எண்.47**

தீர்மானம் ஏற்று கொள்ளப்பட்டது.

வரிசை எண்.4க்கு வார்டு எண்.3,4,9,14,16,23,24,27 நகர்மன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.48**

தீர்மானம் ஏற்று கொள்ளப்பட்டது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்

**//உண்மை நகல் //**

V Ushavenkatesh
தலைவர்,
காரமடை நகர்மன்றம்